


பாப்பு 12-ஆம் பத்திநாதர் 11.10.1956-ல் இவ்விழாவை ஏற்படுத்தினார். கன்னிமரியாள் அரசி என்று திருச்சபையானது ஆதியிலிருந்தே விசுவாசித்து வந்திருக்கிறது. வேத புத்தகத்திலும் பரம்பரையிலும், இந்த விசுவாசத்திற்கு ஆதாரங்கள் உண்டு. என்றும் மரியாள் அரசியாக இருக்கிறாள். ஏனெனில் அவள் பெற்றெடுத்த மகன் அனைத்துக்கும் அரசர் அனைத்துக்கும் ஆண்டவர். அவர் நம்மை மீட்ட அரசரும், ஆண்டவரும் ஆனார். புனித மரியாள் மீட்பின் பணியில் இரட்சகருடன் ஒத்துழைத்தாள். தனது உதரத்தில் அவர் உருவாக அவள் அனுமதி அளித்தாள். நம் மீட்பராகும்படி அவரை அவள் முழு மனதுடன் கையளித்தாள். நாம் எல்லோரும் மோட்சத்துக்குப் போக வேண்டுமென்று அவள் ஆசிக்கிறாள். செபிக்கிறாள். பல வழிவகைகளைக் கையாளுகிறாள். எனவே அவள் அரசி. இந்த விழா அன்று “மானிட சந்ததியை மரியாளின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும். அவளே மானிட சந்ததியின் நம்பிக்கை. திருச்சபை வெற்றி பெறவும் கிறிஸ்தவ அமைதி நிலவவும் அவளே துணைபுரிய வேண்டும். எல்லோரும் மிகுந்த நம்பிக்கையுடன் இந்த அன்னையின் இரக்கத்தின் சிம்மாசனத்தை அணுக வேண்டும். சங்கடங்களில் உதவியையும், இருளில் ஒளியையும், துன்ப துயரங்களில் ஆறுதலையும் இவளிடமாய் தேடி அலைவோம். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுவித்தால் தாங்கள் கேட்ட காரியங்களை அடைவர். அந்த அன்னை உண்மையாகவே நம் அரசி அமைதியைப் பெற்று தருவாள். இயேசு நமக்கு நித்திய மகிழ்ச்சியாகவும், ஆனந்தமாகவும் இருப்பார்.

**சிந்தனை:** **இறைவனை நோக்கி அருள் கேட்டு மன்றாடுவோம். ஆனால் மாதா வழியாக அதைக் கேட்போம். (புனித பெர்னார்து)**

**செபம்:** **மரியாயின் மாசற்ற இருதயமே, திருச்சபையையும் உலகத்தையும் காப்பாற்றும்.**